**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-09022024-8367

Volume: 9

Issue: 2

Month: Octobar

Year: 2024

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 09.07.2024

Accepted: 19.09.2024

Published: 01.10.2024

Citation:
Lovikaran, Suthakaran. "The Role of Kombumuri in Tamil Art, Culture and Traditional Games." *Shanlax International Journal of Tamil Research,* vol. 9, no. 2, 2024, pp. 61–66.

DOI:
https://doi.org/10.34293/tamil.v9i2.8367

*Corresponding Author:
lovikaran20@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Role of Kombumuri in Tamil Art, Culture and Traditional Games

**Suthakaran Lovikaran**
*Master of Music, Mritangam*
*Mahatma Gandhi University, Tirupunitura, Ernakulam, Kerala, India*
*https://orcid.org/0009-0002-1716-3618*

**Abstract**

*In the study titled Kombumuri game in Tamil cultural heritage games, the first sub-topic is the origin history and structure of Kombumuri game. After that, the sub-heading of the game of Kombu Muri is played in the shadow film. Also, moving through pictures about the structure of its parts and then explaining about the materials used in kombukri game, it has clarified how such capital goods are selected as such goods are seen as natural capital goods. After this, Kombumuri game has been associated with religious activities, so some structures have also mentioned the rituals and preparations that are done until the game is finished by preparing the horn. Along with this, Kombu method clearly tells about the way the game is played and the excitement of the game and the celebrations that are carried out after success have told the Tamil culture. Also, as this sport is followed only in Eastern Sri Lanka, there is a place where Kannakai is worshiped and there are significant places that mark the areas where the sport is performed. Finally, in the conclusion, although Tamil games are found in the Tamil artistic culture, this study has been completed with the noble aim of passing on the characteristic of the kombumuri game found in the Tamil worship related to the ancient Kannakai worship of Eastern Sri Lanka to the rest of the society, and with the request that the youth of today should carry out this game with rituals.*

***Keywords:*** *Cultural Game, Tamil Culture, Cultural Expansion, Social Status, Tamil Archetypes.*

## References

1. https://www.youtube.com/watch?v=HV4vy6hMEjY
2. https://mattakalappu.com/kombu&muri/
3. https://groups.google.com/g/mintamil/c/2MfBPturtQ?pli=1
4. https://www.karaitivu.org/2018/09/blog&post21.html
5. https://battiinfo.wordpress.com/author/tharsanster/page/2/

# தமிழர் கலை, கலாச்சார பண்பாட்டு மரபு விளையாட்டுகளில் கொம்புமுறி விளையாட்டு

***சுதாகரன் லோவிகரன்***
முதுகலைமாணி இசை, மிருதங்கம்
மகாத்மாகாந்தி பல்கலைக்கழகம், திருபுணித்துரா
எர்ணாக்குளம், கேரளா

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழர் கலை பண்பாட்டு மரபு விளையாட்டுகளில் கொம்புமுறி விளையாட்டு என்னும் தலைப்பினை. கொண்ட ஆய்வில் கொம்புமுறிவு விளையாட்டின் தோற்ற வரலாறும் கட்டமைப்பு என்னும் தலைப்பில் இவ் விளையாட்டு எவ்வாறு தோற்றம் பெற்றது எனவும் விளையாட்டின் சமயப் பின்னணி என்பனவும், கொம்புமுறி விளையாட்டு சமய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டதனால் கொம்பு தயார் செய்து விளையாட்டு முடிவடையும் வரை செய்யப்படும் வழிபாட்டு முறையையும் ஏற்பாடுகளையும் சில கட்டமைப்புகள் மூலம் கூறியுள்ளது. கிழக்கிலங்கையில் மாத்திரம் இவ்விளையாட்டு பின்பற்றப்படுவதனால் கண்ணகை வழிபாடு காணப்படும் இடம் குறித்தும் விளையாட்டு முன்னெடுக்கப்படும் பிரதேசங்களைக் குறிக்கும் குறிப்பிடத்தக்க இடங்களையும் குறித்து நிற்கின்றது. தமிழர் கலை பறைசாற்றும் வகையில் தமிழர் விளையாட்டுகள் காணப்பட்டாலும் கிழக்கிலங்கை தொன்மைக்குடியான கண்ணகை வழிபாட்டுடன் தொடர்புபட்ட தமிழர் வழிபாட்டில் காணப்படும் கொம்புமுறி விளையாட்டு சார்ந்த சிறப்பி தற்கால இளைஞர்கள் சடங்கு சம்பிரதாயத்துடன் முன்னெடுக்க வேண்டும் என்கின்ற வேண்டுகோளை இவ்ஆய்வு முன்வைத்துள்ளது.*

***ஆய்வின் நோக்கம்:*** *தமிழர் கலை பண்பாட்டுடன் ஒன்றித்துப் பயணிக்கும் இனக்குழுமம் ஆகும். நாட் டாரியல் விளையாட்டு தமிழர்களின் உணர்வுப் பூர்வமான கலையம்சமாகும். அதன் அடிப்படையில் கொம்புமுறி விளையாட்டு அறிவியல் விளையாட்டாகவும், சமய மற்றும் சம்பிரதாய தொடர்புடைய விளையாட்டாகவும் கருதப்படுகின்றது.*

இவ்விளையாட்டு கண்ணகை அம்மனின் சடங்கு சம்பிரதாயங்களுடன் தொடர்புபட்டு நாட்டு மக்களுக்கு மழை பெய்வதற்காகவும், ஊர் மக்களின் நலன் வேண்டியும், கண்ணகை தாயின் மனம் குளிர வேண்டியும் முன்னெடுக்கப்படும் கிராமிய விளையாட்டாகும். ஈழத்தில் கொம்புமுறி விளையாட்டானது ஆரம்பகாலங்களில் கண்ணகை அம்மனின் வழிபாட்டுடன் தொடர்புபட்டு வருடம்தோறும் பின்பற்றப்படுள்ள விளையாட்டாக இருப்பினும், தற்காலத்தில் சுமாராக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற விளையாட்டாக மாறி விட்டது. இதன் அடிப்படையில் கிழக்கிலங்கையில் வாழுகின்ற தமிழர் கலை கலாச்சார விளையாட்டுகளில் குறிப்பிடத்தக்க அளவிற்கு காணப்படும் கொம்புமுறி விளையாட்டானது இலங்கையில் வேறு எந்த இடங்களிலும் விளையாடப்படுவதில்லை. இத்தகைய விளையாட்டினைக் கிழக்கிலங்கை தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழ்கின்ற தமிழர்கள் மத்தியிலும், உலக நாடுகளில் வாழ்கின்ற தமிழர் கலை கலாச்சார பாரம்பரியங்களில் ஒரு கலையாகப் பின்பற்றப்பட வேண்டும் என்கின்ற நோக்கத்திலும், ஈழத்தமிழர்களின் வீரம் புலப்படும் வகையில் முன்னெடுக்கப்படும் விளையாட்டுக்களுள் கொம்புமுறி விளையாட்டும் உள்ளடங்குகின்றது என்பதை உணர்த்தும் வகையில் இவ்ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

**கள ஆய்வு**

கிழக்கிலங்கையில் காணப்படுகின்ற தமிழர் கிராமிய பாரம்பரிய விளையாட்டினுள் கொம்புமுறி காணப்படுவதனால் இவ் விளையாட்டு சார்ந்து நேரில் கண்டு தகவல்கள் சேகரித்ததன் விளைவாக இவ்ஆய்வானது கள ஆய்வாகும்.

**தொகுப்பாய்வு**

இடைப்பட்ட காலங்களில் கிழக்கிலங்கையில் நடைபெற்றுள்ள கொம்புமுறி விளையாட்டின் ஆவண தொகுப்பினை ஆதாரமாகக் கொண்டு இவ்ஆய்வு முன்னெடுத்துள்ளமையினால் தொகுப்பாய்வாக அமைகிறது.

**கொம்புமுறி விளையாட்டின் தோற்ற வரலாறும், கட்டமைப்பு**

கொம்பு முறி விளையாட்டு தமிழர்கள் பத்தினி தெய்வமான கண்ணகி அம்மனின் சடங்கு சம்பிரதாய வழிபாடுகளுடனும், கண்ணகி அம்மன் தோற்ற வரலாற்றுடனும் தொடர்புபட்ட விளையாட்டாகும். கண்ணகைத் தாயின் கணவனான கோவலன் பிழை செய்ததாகக் குற்றம் சாட்டி பாண்டிய மன்னனால் நீதி தவறிக் கொலை செய்யப்பட்டதனால் சீற்றம்கொண்ட கண்ணகை மதுரை மாநகரை எரித்தாராம் அதனால் கண்ணகைத் தாயின் சீற்றத்தினை தணித்து அவளை மனம் குளிரச் செய்வதற்காக இடையர் சேரியில் வாழ்ந்த இளைஞர்கள் வடபுறம் இருந்தோர் வடசேரியாகவும், தென்புறம் இருந்தோர் தென்சேரியாகவும் பிரிந்து மஞ்சள் கொம்பெடுத்து கொம்புமுறி விளையாட்டு விளையாடி கண்ணகைத்தாயின் மனதைக் குளிர வைத்தார்களாம் என கொம்புமுறிவிளையாட்டின்வரலாற்றினை சித்தரிக்கின்றனர்.

இதனைப் பின்பற்றி கொம்பு விளையாட்டை கண்ணகி வழிபாட்டு முறையாக ஆதிகாலம் முதல் கிழக்கிலங்கையில் போற்றி வந்துள்ளனர். ஆவணி அல்லது புரட்டாதி மாதங்களில் பருவகால நிகழ்ச்சியாக இவ்விளையாட்டு நடாத்தப்பட்டு வந்துள்ளது. ஆதிக்குடிகள் வாழ்ந்த இடங்களிலும், அவை பின்பற்றிய சில இடங்களிலும் வைகாசி, ஆடி மாதங்களிலும் கொம்புமுறி விளையாடியமை அறியக்கூடியதாகவுள்ளது. இதைவிட நோய் நொடி இன்றியும், மழை வேண்டியும், செல்வம் செழிபுற்று விளங்கவும் கண்ணகைக்கு நேர்த்தி வைத்து கொம்புமுறி விளையாடும் மரபும் இருந்து வந்திருக்கின்றது. கிழக்கிலங்கை தமிழர்கள் மத்தியில் வம்சவழிகள் தாய் வழி சமுகமாகவே காணப்படுகிறது. அதாவது கிழக்கிலங்கையில் சாதிப்பிரிவுகள் காணப்பட்டாலும் குடி என்கின்ற சமூக கட்டமைப்பு பெரிதும் பின்பற்றப்படுகின்றது. இந்தக்குடி அமைப்பில் பிறக்கின்ற பிள்ளைகள் தாய் வழியாகவே குடி அந்தஸ்து கடத்தப்படுகின்றது மாறாக தந்தை வழியாகக் கடத்தப்படுவதில்லை. இத்தகைய குடிக் கட்டமைப்புத் திருமணம் செய்தல், ஆலயத்தின் முதல் மரியாதை, சமூக அந்தஸ்து என கிழக்கிலங்கையில் பண்டைய காலம் முதல் தற்காலம் வரை செல்வாக்குச் செலுத்தி வருகின்றது.

குடிக்கட்டமைப்புகள் கிழக்கிலங்கைத் தமிழர்கள் சமுகத்தில் காணப்பட்டாலும் தந்தை வழி சமுகத்தையே கருத்தில் கொண்டு கொம்புமுறி விளையாட்டு விளையாடப்படுகின்றது, அதாவது கொம்புமுறி விளையாட்டு வீர விளையாட்டு என்பதனால் ஆரம்பகால முதல் தற்காலம் வரை கொம்புமுறி விளையாட்டில் ஆண்கள் மாத்திரமே கலந்துகொள்கின்றனர்.

**கொம்புமுறி விளையாட்டு விளையாடப்படும் அமைப்பு வரைபடம்**

1. தாய்மரம்
2. மரவளையம்
3. தென்சேரி கொம்பு பொருத்தப்பட்ட பாகம்
4. வடசேரி கொம்பு பொருத்தப்பட்ட பாகம்
5. செவ்வாய்க்குற்றி
6. மரவளையம்

7. வடசேரி, தென்சேரி வடம்
8. கொம்புகள்

## கொம்பு முறி விளையாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள்

### கொம்பு

கொம்பு எனப்படுவது மரத்தினுடைய வேர் பகுதியில் காணப்படும் உறுதியான பகுதியாகும். இது கூடிய நாட்கள் பராமரிப்பில் விடப்பட்டு கொம்புமுறி விளையாட்டுக்காக வளர்க்கப்படும் மரத்தினுடைய பாகமாகும். இதன் அடிப்படையில் கொம்புக்காக குறிப்பிட்ட சில மரங்கள் அதன் உறுதியைக் கருத்தில் கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றது. அவை:-

1. வெட்சி,
2. கருவீரம்,
3. கரையாக்கு,
4. புளியை ,
5. விளினை,
6. விடத்தல்,
7. கோணியப்பூறி

இத்தகைய மரங்கள் கிழக்கிலங்கையில் தமிழர்கள் மத்தியில் பேச்சுவழக்கில் காணப்படுகின்றன.

### பில்லி கொம்பு

விளையாட்டின்போது கொம்புடன் இணைத்து வரியப்படும் தடி பில்லி எனப்படும். கம்புகள் கொம்பு உறுதியாகவும், உடைந்து போகாமல் இருக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய கம்புகளுக்குக் குறிப்பிட்ட சில மரங்கள் உறுதியை கருத்தில்கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அவை

1. விளினை
2. கரையாக்கு
3. வெள்ளைக்கருகாலி
4. முதிரை
5. பாலை

### அடை

கொம்பு மற்றும் பில்லி பிணைக்கப்பட்டுள்ள கம்புகளுடன் இணைத்துக் கட்டப்படும் கம்பிக்கு அடை என்று பெயர். இந்த அடை எனப்படும் கம்புகள் கொம்பின் உறுதிப்பாட்டினை நிலை நிறுத்துவதற்கும், வடசேரி தென்சேரி பிரிவினர்வடத்தைக்கொண்டுஇழுப்பதற்கு உறுதுணையாக இருப்பதற்கும் கொம்பு பொருத்தப்பட்ட பில்லியுடன் இறுகக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இத்தகைய கம்புகளுக்குக் குறிப்பிட்ட சில மரங்கள் உறுதியைக் கருத்தில்கொண்டு தேர்ந்தெடுக்கப்படுகின்றன அவை:

1. வெள்ளைக் கருங்காலி,
2. முதிரை வெடுக்குநாறி,
3. காட்டுக்கொக்கட்டி

### ஆப்பு

மரத்தின் கொடிகள் மற்றும் மரத்தின் பட்டைகளால் ஒன்றிணைத்துக் கட்டப் பட்ட கொம்பு, பில்லி, அடை ஆகிய பகுதிகளை மேலும் இறுகச் செய்வதற்கு அடைகளின் இடையில் உறுதியான கம்புகளை வெட்டி ஒரு முனையினை கூராக்கி அதன் உள் வைத்துக் கொடிகள் மற்றும் பட்டைகள் இறுகும் வண்ணம் அடிப்பதற்குப் பயன்படுத்தப்படுவது ஆப்பு ஆகும். இத்தகைய ஆப்புகள் முதிரை, திருக்கொன்றை, பாலை ஆகிய மரங்களைக் கொண்டு செருகப்படுகின்றது.

### தாய் மரம்

தாய் மரம் எனப்படுவது கொம்பு மற்றும் பில்லி, அடை, ஆப்பு ஆகிய பகுதிகளைக் கொண்டு மரத்தின் பட்டையை அல்லது மரத்தினுடைய கொடிகளால் ஒன்றிணைக்கப்பட்ட இரண்டு வடசேரி தென்சேரி கொம்புகளும் இணைக்கப்பட்ட பகுதியே கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உறுதியான மரம் தாய்மரம் என்று சொல்லப்படும். தாய்மரம் கொம்புமுறி விளையாட்டு வழமைப் பிரகாரம் நடைபெறுகின்ற கொம்புச்சந்தி அல்லது ஆலயத்திற்கு அருகில் சுற்றிவர வெட்ட

வெளியாகக் காணப்படும் நிலையாக மரத்தினைத் தாய்மரமாக பயன்படுத்துவர். அத்தகைய தாய்மரங்கள் பின்வரும் இனங்களாகக் காணப்படுகின்றன. அவை:

1. ஆலை,
2. அரசை,
3. வம்மி,
4. வாகை,
5. காட்டுத்தேங்காய்

### செவ்வாய்க்குற்றி

தாய் மரத்துக்கு எதிர் முனையில் காணப்படுகின்ற கொம்பின் மறுமுனையில் அசையும் வண்ணம் செங்குத்தாக நாட்டப்படும் பனை மரத்தினைச் செவ்வாய்க்குற்றி என்று அழைப்பர். இது பெரும்பாலும் பனை மரத்தினை வெட்டி எடுத்து அடிப்பக்கம் மேல் பக்கமாகவும் தலைப்பக்கம் கீழ்ப்பக்கமாகவும் வருமாறு நிலத்தில் குளி இட்டு அசையும் வண்ணம் பொருத்தப்படும்.

### மரவளையம்

கொம்பு இழுவைக்காகத் தாய்மரம் மற்றும் செவ்வாய்க்குற்றி ஆகிய பகுதிகளில் சுற்றிப் போடப்படும் வளையம் மரவளையமாகும். இது பெரும்பாலும் மரங்களின் கொடி (கருந்தெகிழங்கொடி) மற்றும் மரங்களின் பட்டைகளை வைத்துக் கயிறு போல் உண்டாக்கிப் பல பட்டுகளில் வட்ட வடிவில் சுற்றி மரத்துடன் இணைக்கப்படுகின்றது.

கொம்புமுறி விளையாட்டு ஆரம்பிப்பதற்கு முன்பதாக கொம்பும், கொம்போடு ஏனைய ஏற்பாடுகளும் செய்யப்பட்டும், அதற்காக இத்தனை பொருட்களும் தயார் செய்யப்படுகின்றன.

### கொம்புமுறி விளையாட்டின் ஆரம்ப ஏற்பாடுகள்

கொம்பு முறி விளையாட்டானது தமிழர் கலை கலாச்சாரப் பாரம்பரியங்களில் கிராமிய விளையாட்டாகக் காணப்பட்டாலும் தமிழர்களின் வீரம் சொல்லக்கூடிய அளவில் காணப்படுகின்ற விளையாட்டாகும். ஆரம்ப காலங்களில் கண்ணகி அம்மனின் மனம் குளிர வேண்டி விளையாட்டாகப் பின்பற்றப்பட்டாலும் பிற்பட்ட காலங்களில் சமுதாயத்தில் காணப்பட்ட குடிகளுக்கு இடையிலான முரண்பாடை தரக்கூடிய விளையாட்டாகவும் மாற்றம் பெற்றிருந்தது.

அதாவது வெற்றி பெறுவோர் தோல்வியடைந்த குழுவினரை வசை பாடுவதாக இருக்கின்ற பட்சத்தில் அவர்கள் மனதில் கோப உணர்வை உண்டாக்கத் தக்கனவாகக் காணப்படுகின்றது. அதுபோல கொம்புமுறி விளையாட்டுக்காகத் தயார் செய்யப்படும் கொம்புகளுக்கு மந்திர தந்திரங்கள் கொடுத்து அதை உடைய வைப்பதற்கு மாந்திரீகம் செய்வதாகவும் ஒரு சில பிரதேசங்களில் நடைபெறுவது உண்டு. இதுபோல கொம்புமுறி விளையாட்டானது நடைபெறுவதற்கு முன்னர் அதற்குரிய ஏற்பாடுகள் அதிகம் காணப்படுகின்றன. அவை:

**போர்தேங்காய் அடித்தல்**
**மாலைவேளை பூசை**
**வெற்றிக் கொம்பு முறித்தல்**
**வசந்தன் ஆடல்**
**ஏடகம் கட்டி ஊர் சுற்றுதல்**
**கொம்புக்கு மந்திரக்கிரியை செய்தல்**
**கொம்பு தட்டெடுத்தல்**
**வசை பாடல்**
**குளிர்த்தில் ஆடல்**

### கொம்பு முறி விளையாடும் முறை

கொம்பு முறி விளையாட்டில் பெரும்பாலும் ஆண்கள் மாத்திரமே பங்கு பற்றி விளையாடுவர். இதில் வடசேரி, தென்சேரி என்னும் இரண்டு பகுதியினர் பிரிக்கப்பட்டு சம அளவிலான அங்கத்தவர்கள் வேட்டி கட்டி தலையில் துணி கட்டி வேறுபடுத்தி காட்டும்வண்ணம் அலங்கரிக்கப்படுவர். ஆரம்பத்தில் கொம்பு பூசை செய்யப்பட்டு விளையாட்டு களத்திற்கு எடுத்துவரப்பட்டதும் கொம்பு இரண்டினையும் முறையே தயார்

செய்யப்பட்ட பில்லி கொப்புடன் திரிக்கப்பட்ட கயிறுனால் சுட்டிக்காட்டப்பட்டு மஞ்சள் பூசப்பட்டப் பில்லி கொம்பு தயாராகும். இதன்பின்னர் பில்லி கட்டப்பட்ட கொம்புகள் இரண்டினையும் முறையே எதிர்ரெதிர் திசையில் வைத்துக் கொம்புகள் கொளுவி கொள்ளும்வண்ணம் இறுகக் கட்டுவர்.

இதன்பின்னர் பில்லியுடன் அடை எனப்படும்கம்புகட்டுகளைஅடக்கிப்பின்னர் பட்டை மற்றும் மரங்களின் கொடியினால் தயார் செய்யப்பட்ட திருக்குகளை இறுகக்கட்டிக் கொள்வர். இதன் பின்னர் கொம்பு பொருத்தப்பட்ட பில்லியுடன் கம்புகள் நிறைந்த கட்டுகள்போல காட்சி அளிக்கும். பின்னர் கம்பு இடைவெளிகள் காணப்பட்டால் அதன் இடைவெளிகளில் ஆப்பு வைத்து அடித்து இறுக்கிகொள்வர் இதன்பின்னர் தென்சேரி கொம்புப் பகுதியை மரவளையத்தினை கொண்டு தாய் மரத்துடன் இறுக்கி கட்டிக்கொள்வர். பின்னர் வடசேரி கொம்பினையும் மரவளையத்தினைகொண்டு செவ்வாய்க்கு உச்சியில் இணைத்துக் கட்டுவர். பின்னர் செவ்வாய் குட்டியில் மேல் முனையில் தலா இரண்டு வடங்கள் வடசேரியனருக்கும் தென்சேரினருக்கும் கட்டப்பட்டு சம அளவுகள் கொண்ட வீரர்களால் இழுத்துக் கொம்புகள் உடைக்கப்படும் இவ்வாறு உடைக்கப்படும் கொம்பு தோல்வியுற்றதாகவும் உடையாத உறுதியான கொம்பு வெட்டி பெற்றதாகவும் கருதப்படும்.

இதன் பின்னர் வெற்றி பெற்ற அணியினர் கொம்புடன் அந்த ஊர் முழுவதும் ஊர்வலம் வந்து வெற்றியினை உரக்கச் சொல்லியும், தோற்றவர்களுக்கு வசைபாடியும் விளையாட்டினை கொண்டாடுவர். இதன் பின்னர் கொம்புமுறி பாடல் பாடி விளையாட்டு இனிதே நிறைவுபெறும். இத்தோடு கொம்புமுறி விளையாட்டு முடிந்ததன் பின்னர் மழை பெய்யும் வழக்கம் கிழக்கிலங்கையில் தற்காலத்திலும் நடந்து கொண்டிருப்பது நம்பிக்கையை தரக்கூடிய ஒரு சந்தர்ப்பமாகக் காணப்படுகின்றது.

## முடிவுரை

தமிழர்களின் கலை கலாச்சாரம் வீரம் என்பன பிரதிபலிக்கும் வகையில் கிராமிய விளையாட்டுகள் தமிழர்கள் மத்தியில் அதிகம் கொட்டிக்கிடக்கின்றது. அவற்றுள் கிழக்கிலங்கை தமிழர் சமூகத்தில் கிராமிய தெய்வ வழிபாட்டுடன் தொடர்புபட்டு தற்காலம் வரை பின்பற்றப்படும் கொம்புமுறி விளையாட்டு சிறப்பு வாய்ந்து காணப்படுகிறது. இருப்பினும் இவ்விளையாட்டு இலங்கையில் ஏனைய பிரதேசத்தில் பேசு பொருளாக மாத்திரம் காணப்படுகிறது.